ஸ்ரீ திரிபுரஸுந்தரீ ஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

புருஷார்த்தங்களெல்லாவற்றையும் பிராணிகள் தெரிந்துகொண்டு அவைகளைப்பற்றி ஆசைகொள்ளாவிடினும் அர்த்தம் (பொருள்) காமம், (சிற்றின்பம்) இவைகளில் ஆசைகொள்ளாதார் யாருமில்லை, ஆனால் அவைகளை ஸாதித்துக்கொள்ள இன்றியமையாத ஸாதனம் இன்னதுதான் என்பதைத் தீர்மானித்துக்கொள்ளவும், அதற்கிணங்க நடந்துகொள்ளவும், அவர்களுக்கு மனம் திடப்படுவதில்லை. நம் முன்னோர்கள் கைகளைத் தூக்கி உரத்த சத்தமிட்டு ஜனங்களைக்கூவியழைத்து "அர்த்தமும் காமமும் தர்மத்தாற்றான் ஸித்திக்கின்றன" என்று கண்கூடாகக் கண்டறிந்ததைக்கூறினும் அதைக்காதுகொடுத்துக் கேழ்ப்பவர் எவரையும்காணோமே யென்று மனம் நொந்துகொள்ளும்வண்ணம் ஜனங்கள் நடந்துகொள்ளுகிறார்கள். குடும்பத்தலைவன் குழந்தைகளின் நன்மைக்காக நல்லஉபாயங்களை யறிவித்தும் அந்த வழியில் அச்சிறுவர்கள் செல்லாமல் கண்டபேர் பேச்சைக்கேட்டுக் கெட்டுப்போவார்களானால் அந்தப்பெரியார் மனவருத்தப்படாமல் வேறென்ன செய்யமுடியும். ஆயினும் பெரியோர்கள் சிறுவர்களின் சிரேயஸ்ஸைக்கோரினவர்களானதால் அவர்களைச் சீர்திருத்திப் பன்முறையிலும் ஹிதத்தையே உபதேசிப்பதுபோல் நம் பண்டிதமணிகளும் பலவாறாகப் புண்ணிய மார்க்கத்தையே உபதேசித்துவருகிறார்கள். அதைத் தற்காலத்தியவர்கள் ஹிதமாக நினைப்பதில்லை. தர்மோபதேசம் என்ற வியாஜத்தால் தங்களைக் கெடுத்துவிடுவதாகவும் நினைக்கிறார்கள். விளையாட்டுப்பிள்ளைகளுக்குப் பின்னிட்டு நேரும் நன்மைக்காகப் படிப்பு முதலிய நற்காரியங்களில் பிரவிருத்திக்கச்செய்யும் குடும்பத்தலைவரின் பேச்சை நலமென்று நினைக்காமல் நம்மிஷ்டப்படி செய்யவொட்டாமல் தடைசெய்து கெடுத்துவிடுகிறார்களே என்று நினைப்பதுபோலிருக்கின்றது தற்காலத்தியவர்களுடைய நினைப்பு. பால்யத்தில் பெரியோர் சொற்படி நடக்காமல் மனம் போனபடியெல்லாம் காலத்தை வீணாகக் கழித்துவிட்டு வயதுமுதிர்ந்த காலத்தில் ஒன்றுக்குமுதவாமல் கஷ்டப்படுவதுபோல் மூத்தோர் சொல்லியிருக்கும் தர்மதத்வத்தையுணராமலும் கர்மபூமியில் கர்மாதிகாரம் பெற்ற பிறவியையடைந்தும் அதற்குத் தக்கவாறு நடக்காமலும் கேவல அர்த்தகாமத்திலீடுபட்டுத் தம் வாழ்நாட்களை எல்லாம் வீணாக்கிவிட்டு புண்ணியலோகத்தையடையப் பாக்கியம் பெறாமலும் நரகத்திற்கே ஆளாகிக் கஷ்டப்படுவார்களே? அந்த கஷ்டம் அவர்களுக்கு வரக்கூடாதென்ற கருணையால் இவர்கள் சொல்லுவதையெல்லாம் கவனிக்காமல் புத்திரனுக்குப் பெற்றோர் ஹிதத்தையே தேடுவதுபோல் மஹான்களும் தங்கள் கடமையென்று தர்மத்தையே உபதேசிக்கிறார்கள். அவர்களிடம் நன்றி பாராட்டி அவர்கள் சொற்படி நடந்து யாவரும் இஹபரசிரேயஸ்ஸையடைவார்களாக. சுபம்.

பத்திராதிபர்.

# லோகாந்தரம்.

(275-வது பக்கத்தொடர்ச்சி.)

வயல்களில் வெட்டிக்கொத்தி, கட்டி, புரட்டி, மேடுபள்ளம் திருத்தி எருத்தழை முதலிய உரப்போட்டு நீர் பாய்ச்சி, நைய உழுது விதைவிதைத்து பட்டிமாடு மேய்ந்து அழித்துவிடாமல் வேலிகட்டிக் காப்பாற்றி மற்றும் செய்யவேண்டிய வேலையை அவ்வவ்வேளையில் ஒழுங்காகச் செய்துவந்தால் பின்னிட்டுத் தன் இஷ்டம்போல் தானியத்தையடைந்து வீட்டில் சுகமாய்வாழலாம். அதுபோல் கர்மபூமியாகிய நம் பாதகண்டத்தில் ஜனித்தவர்களும் கர்மயோகத்தையனுஷ்டித்து லோகாந்தரத்தில் சுகமாய் வாழ வேண்டியவர்களேயன்றி இவ்விடத்திலேயே சாசுவதமாயிருப்ப வர்களில்லை. இந்த சரீரம் முடிந்தபின் இல்லாமற் போய்விடுகிற வர்களுமில்லை. ஆனால் லோகாந்தரங்களிற் சென்று அவ்விடத்திய சுகத்தையனுபவிப்பதற்குத் தக்க ஸாதனங்களையனுஷ்டிப்பதற் காகவே கர்மானுஸாரமாகக் கடவுளால் கர்மபூமியில் கொண்டு விடப்பட்டிருக்கிறார்கள். ஆகவே வேலை செய்யவேண்டிய இடத் தில் வந்து வேலை செய்யாமலிருப்பதும் விபரீதமான வேலைகளைச் செய்வதும் சரியான கார்யமாகாது. உசிதமான வேலையைச் செய்வதே யுக்தமாகும். அந்த வேலை இன்னதென்று தானாகவே தீர்மானித்துவிடக்கூடியதல்ல. கிருஷி செய்ய ஆரம்பித்தவன் அத்தொழிலில் பன்முறை பாடுபட்டுப்பயனையெடுத்திருப்பவனது பேச்சைக்கேளாமலும், அவன் செய்வதுபோல் செய்யாமலும் தன்னிஷ்டப்படி "இதுவும் வேலைதானே" என்றெண்ணி செய்வ தெல்லாம் சரியான வேலையாகாதல்லவா? அதுபோல் லோகாந் தாத்திற்குப்போய் சுகம் பெறுவதற்குரிய ஸாதனங்களைச் செய்து

அதின் பயனைப் பன்முறையநுபவித்திருப்பவன் சொற்படி நடக்காமல் "எனக்கு இதுதான் ஸரியான கார்யமாகத் தோன்றுகிறது" என்று நினைத்தபடியெல்லாம் செய்துவிடுவது சரியான கர்மயோகமாகாது. ஆனால் அநுபவித்துப்பார்த்திருப்பவன் சொற்படி நடப்பதே சரியான கார்யமாகும். ஆதலால் சாஸ்திரங்களிற் கூறப்படுகிறபடி கர்ப்பாதனம் முதலியகார்யங்கள் ஒழுங்காகச் செய்யப்பட்டால் இங்குப்ரம்மவர்ச்சஸம், (ப்ரம்மதேஜஸ்) முதலியபயனைப் பெற்றுப்பாலோகத்திலும் ஸ்வர்க்காதிசுகங்களைப் பெறலாம், அவ்விதம் ஸ்வர்க்காதி சுகமநுபவிப்பவர்களுக்கு அவனது ஸந்ததியார்களும் மற்றவர்களும் ஹவ்யகவ்யாதி க்ரியைகளால் உதவி புரியவேண்டியவராவார்கள். பூர்வபாக்கியவசத்தால் பூமண்டலாதிபத்யம் பெற்றவனுக்கு அவனது ராஜ்யத்திலிருக்கும் பிரஜைகள் ஆறிலொரு பாகம்வீதம் கப்பம் செலுத்துகின்றார்களல்லவா? தனது பாக்கியத்தால் சக்கிரவர்த்தி ஸ்தானத்தை அவன் அடைந்துவிட்டானே? அவனுக்கு பிரஜைகள் கப்பம் கட்டவேண்டியதென்பது எதற்காகவென்று நினைப்பதற்கில்லை, ஸர்வஜனங்களும் கப்பம் செலுத்துவதைப் பெறுவதுதான் சக்கிரவர்த்தித்தன்மையாகும். அதுபோல் தன்தன் புண்ணியவசத்தால் ஸ்வர்க்காதிலோகங்களில் தேவர்கள், பிதிருக்கள் முதலிய தன்மையடைந்தவர்களுக்குக் கர்மபூமியிலுள்ளவர்கள் ஹவிர்பாகம் கொடுக்கவேண்டியது கடமையாகும். அதைப்பெறுவதே ஸ்வர்க்காதிகளிற் சென்றவர்களுக்கு தேவத்தன்மை முதலியவையாகும். இதில் எவ்வித ஆசங்கையும் செய்ய இடமில்லை, இதற்காகவேதான் வர்ணாசிரமதர்மநியமம் சாஸ்திரங்களில் போதிக்கப்படுகின்றது. இப்படியிருந்தும் தற்காலத்திய சிலருக்கு இந்த தர்மவிஷயத்தில் பற்பல சங்கைகள் நிகழ்கின்றன. அந்த சங்கைகளின் விபரம் வேரிடத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் அந்த சங்கைகள் சரியானவைகளல்லவென்பது அதன் ஸமாதானத்தையும் பார்ப்பவர்களுக்குப் புலப்படாமற்போகாது. ஆகையால் நமது சாஸ்திரத்தில் கூறப்படுகின்ற காரியங்களில் எவ்வித ஆசங்கைகளையும் செய்யாமல் அது பூர்விகர்கள் அநுபவித்தபடி உபதேசிக்கப்பட்டதென்று நம்பி எல்லோரும் அவரவர்களுக்குரிய தர்மத்தைச்செய்து சிரேயஸ்ஸையடைவார்களாக. சுபம்.

பத்திராதிபர்.

---

# வயோநிர்ணயம்.

(முன்தொடர்ச்சி)

வேண்டுமென்று கூறியிருப்பதுடன் புத்திரர்களுக்குமவன் எஜமானியாகவே இருக்கவேண்டுமென்றும் கூறியிருப்பதை விமர்சஞ் செய்வோமாகில் விவாஹஞ் செய்யப்படும் பெண்ணுக்குப் புத்திரனுண்டாயிருக்கவேண்டுமென்றும் தோன்றுகிறதல்லவா?

5. அப்படியே கணவன்வீட்டிற்கு ரதத்திலேறிக்கொண்டு செல்லுங்காலத்தில் நடுவழியில் "பெரியமரம்" முதலிய வஸ்துக்களைக் கடந்துசெல்லும்படி நேரிட்டால் வானை । அச்சமயத்தில் ஜபிக்கும்படி விதித்திருக்கும் மந்திரத்தாலும் புத்திரனுடன்கூடிய விவாஹப்பெண்ணிற்குப் பிரார்த்திக்கப்படும் பாபவிமோசனமும் புத்திரவதீகளாக விவாஹப்பெண்கள் இருக்கவேண்டுமென்று நன்கு அறிவிக்கின்றது.

6. ஹோமஞ்செய்வதில் விநியோகஞ் செய்யப்பட்டிருக்கும் வேறொரு மந்திரத்தால் குமாரர்களுக்கு ஸுகமேற்படவேண்டுமென்று பிரார்த்தனை செய்துகொள்வதும் புத்திரர்களில்லாத அப்பெண்ணுக்கு விவாஹஞ்செய்யக்கூடாதென்பதைத் திடப்படுத்துகின்றது.

7. மனுஸ்மிருதி முதலியவைகளில் நிரூபிக்கப்படும் பன்னிரண்டுவிதப் புத்திரர்களுக்குள் "ஸஹோடன்" என்ற புத்திரனை ஒருவனாக எடுத்துக்கூறியிருப்பதும் புத்திரவதீவிவாஹம் ஸ்மிருதிகளிலும் மிகப்ரஸித்தமென்பதை வெளிக்காட்டுகின்றது.

அப்படியே "விவாஹாக்னியைத் தானாவது அல்லது தனது மனைவியாவது, அல்லது தனது புத்திரர்களாவது, அல்லது பெண்களாவது சுச்ரூஷை புரிந்துவரவேண்டும்" என்ற ஸூத்ரவசனத்தால் விவாஹகாலம்முதற்கொண்டே மனைவிக்கு விவாஹாக்னியின் சிச்ரூஷையை விதித்திருப்பதால் விவாஹகாலத்தில் அக்னி சிச்ரூஷை செய்யத்தகுதியாயிருக்கும் வயதுள்ளவளாக விவாஹப்பெண்ணிருக்கவேண்டுமென்று நினைத்துக்கொண்டு ருதுமதீ விவாஹந்தான் ஸூத்திரக்காரருக்கும் இஷ்டமென்று எவ்விதம் வியவஸ்தை செய்கிறீர்களோ? அவ்விதமே புத்திரர்களையும் அந்த ஸூத்திரத்தில் அக்னிசிச்ரூஷைக்கு அவனுக்கடுத்தபடியில் அதி

காரிகளாக விதித்திருப்பதால் அவ்வக்னிசுச்ரூஷை செய்ய யோக்கியமாயுள்ள வயதுவாய்ந்த புத்திரர்களுடன் கூடிய பெண்ணையே விவாஹம் செய்விக்கத்தகுந்தவனென்று நாங்கள் வியவஸ்தை செய்வதில் என்ன தடை? ஆகவே தாய் தந்தை முதலியவர்களின் வீட்டிலிருக்கும்போதே ருதுவாகி பிள்ளைகளைப் பெற்றபிறகு தான் ஸ்திரீகளுக்கு அப்புதல்வர்களுடன் விவாஹஞ்செய்விப்பது தான் வைதிகஸித்தாந்தம் தைவாதீனமாக யாருக்காவது அவ்விதம் பிள்ளைபிறக்காவிட்டால் அவர்களுக்கு விவாஹஞ்செய்ய வேண்டியது அவசியமில்லைஎன்றும் கற்பனைசெய்துவிடுகின்றோம். இன்றேல் புத்திரவதீவிவாஹத்தையறிவிக்கும் கீழ்கண்ட மந்திர லிங்கங்களெல்லாம் பயனற்றதாயல்லவா முடியும். இவ்வாறு புத்திரவதீவிவாஹத்தை மந்திரலிங்கமூலமாக ஸித்தாந்தப்படுத்துவதில் என்ன விரோதமிருக்கின்றது? இவ்விதம் புத்திரவதீவிவாஹத்தை ஸ்தாபிக்கும்பக்ஷத்தில் ஸ்மிருதிவசனங்களுக்கு விரோதமேற்படுமென்றாலோ மந்திரங்களுக்குப் பின்காலத்தில் மகரிஷிகளால் வரையப்பட்டிருக்கும் ஸ்மிருதிவசனங்களை யார்தான் ஆதரிப்பார்? ஸ்மிருதிவசனங்களைக்கொண்டு ஒரு விதிவாக்கியத்தைக் கற்பித்துக்கொள்வதுபோல் மந்திரலிங்கங்களைக்கொண்டும் ஒரு புத்திரவதீவிவாஹவிதியைக் கல்பித்துவிடுகிறோம். இத்தகைய ஸித்தாந்தத்திற்கு எதாவது சுருதி விரோதமேற்படுமேயானால் அதை பரிஹரிக்கவேண்டியதுமவசியமென்று எற்படும். இந்த ஸித்தாந்தத்திற்கு யாதொரு சுருதிவிரோதமும் எற்பட்டிருப்பதாக ஒருவராலுங் காண்பிக்கமுடியாது. ஆகையால் அடியிற் கண்ட மந்திரலிங்கங்களால் புத்திரவதீவிவாஹந்தான் சாஸ்திரியமாகும். இவ்விதம் சிலதார்கிகநிபுணர்களின் ஸூக்ஷ்மதர்க்கமாகும். ஆகவே ருதுமதீவிவாஹம் சாஸ்திரீயமென்று ஸ்தாபிக்கும் தங்களுக்குப் புத்திரவதீவிவாஹமும் சாஸ்திரீயமாகுமென்பதில் சிறிதும் ஆக்ஷேபமில்லை.

தவிற, இதுவரையில் தங்கள் உதாகரித்துக்காட்டிய மந்திரலிங்கங்களை உண்மையில் லிங்கங்களாக ஒப்புக்கொண்டு பேசினோம். வியாகரணம் மீமாம்ஸை நியாயம் முதலிய தரிசனங்களில் வெகு நிபுணர்களாகிய பண்டிதசிரோமணிகளால் விசாரிக்கப்படும்போது தங்களால் எடுத்துரைக்கப்பட்டமந்திரலிங்கங்களை லிங்கங்களாகவே உண்மையில் ஒப்புக்கொள்வதற்கிடமில்லை.

அதெப்படி என்றால் உங்களால் உதாகரிக்கப்பட்ட எல்லாவிவாக மந்திரங்களிலும் "கணவனைக்கொல்லாதவளாக இருக்கவேண்டும். எங்களுக்கும் பசுக்களுக்கும் ஸுகத்தைக் கொடுக்கிறவளாக இருக்கவேண்டும்" "என் சரீரத்துடன் சம்பந்திக்கவேண்டும்" என்னுடன் கிழவயதுவரையில் நீ வாழ்ந்துவரவேண்டும்" என்னுடன் எழுடிவைத்தவளாக இருக்கவேண்டும்" உன்னுடன் ஸ்னேகத்தை நான் அடையவேண்டும்" "நம்மிருவருக்கும் ஸங்கல்பம் ஒரேவிதமாகவே இருக்கவேண்டும்" "நீ என்னை வாக்மன: காயங்களால் அனுஸரித்துக்கொண்டே இருக்கவேண்டும்" "கணவனுக்கும் நீ உயர்ந்த நிலையில் ஏறவேண்டும்" மாமனார், மாமியார், நாத்தனார், பந்துக்கள், பணம் இவைகளுக்கு நீ எஜமானியாக இருக்கவேண்டும்" புத்திரஸம்பத்தை நீ விருத்திசெய்யவேண்டும்" "நீ அக்கினிகார்யங்களில் வெகுஜாக்கிரதையாகவிருக்கவேண்டும்" என்றிவ்விதமாக "லோட்" "லேட்" "லிங்" என்ற விகுதியுடன் கூடிய பதங்களே பிரயோகிக்கப்பட்டிருக்கின்றனவேயொழிய வேறு விகுதியுடன் கூடிய பதத்தைப்பிரயோகிக்கவில்லை. வியாகரண சாஸ்திரத்தில் "லோட்" "லேட்" "லிங்" என்ற இம்மூன்று விகுதிகளுக்கும் 'ஏவுதல்' 'வரித்தல்' 'கூப்பிடுதல்' முதலிய அனேக அர்த்தங்கள் உண்டென்று கூறியிருந்தபோதிலும் இவ்விவாக மந்திரங்களில் காணப்படும் இம்மூன்று விகுதிகளுக்கும் அவ்வர்த்தங்களெல்லாம் பொருத்தமுடையதாக வேற்படமாட்டாததால் "பிரார்த்தனை புரிவது" என்ற அர்த்தவிசேஷந்தான் பொருத்தமுடையதாகும். இவ்விஷயம் யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றது. உலகத்தில் கிடைக்காத வஸ்துவில் கிடைக்கவேண்டுமென்று பிரார்த்தனை செய்வது யாவருக்கும் வழக்கமேயொழிய கிடைத்திருக்கும் விஷயத்தைப் பிரார்த்தனை செய்துகொள்வது வழக்கமில்லை. ஆகவே அவ்விதப் பிரார்த்தனை என்ற அர்த்தத்தை அறிவுக்கும் பதத்திற்கும் அவ்விதமாகத் தான் கூறவேண்டும். இன்றேல் அவ்வார்த்தை அறிவிக்கும் பதம் ஸாதுவாகமாட்டாது. எவனுவது கிடைக்காதவிஷயத்தில் பிரயோகம் செய்யவேண்டிய பதத்தைத் தனக்குமுந்தியே ஸித்தமாய்கிடைத்திருக்கும் விஷயத்தில் பிரயோகம்பண்ணுவானு? இங்ஙனமிருக்க, அனுதியென்றும் நித்தியமென்றும், துதிக்கப்படும் மந்திரங்களில் இவ்விதப் பிரயோகஞ் செய்யப்படுமோ? நீதி வழுவாமல் ஆசாக்ஷி

புரிந்துவரும் அரசனிடம் "நீ அரசனாகவேண்டும் என்று பிரார்த்தனை செய்கின்றவனை யாராவது நல்ல புத்திசாலியென்று கொண்டாடுவார்களா ? அரசாக்ஷி புரிவதற்கு யோக்யனாகவிருப்பவனிடத்தில், அரசனாகவில்லாத காலத்தில் "நீ அரசனாகவேண்டும் என்று ஆசிர்வாதம் செய்வது மேலானதாகும். அவ்விதஞ் செய்வதுதானுசிதமுமாகும். இக்காரணம்பற்றியே வியாகரண சாஸ்திரத்திலும் "संबोधनेच" என்ற ஸூத்திரத்தில் "நீ அரசனாக வேண்டும். (பிறகு) யுத்தஞ் செய்வாயாக" 'ஓ அரசனே! நீ யுத்தஞ்செய்யவேண்டும்' என்ற இருவாக்கியங்களுக்கும் அர்த்தம் வெவ்வேறென்று பறையறையப்பட்டிருக்கின்றது. ஆகையால் 'லோட்' முதலிய விகுதிகளுடன் கூடிய பதங்களின் அர்த்தவிசேஷத்தை விசாரிக்கும் பொழுது அத்தகைய பதங்களுடன் கூடின விவாகமந்திரங்களால் வரன் "தனது சரீரஸம்பந்தயோக்யதை" முதலிய பிரயோஜனங்களை விவாகஞ்செய்விக்கப்படும் பெண்ணுக்குப் பிரார்த்தித்துக்கொள்ளுகின்றானென்றுதான் மந்திரார்த்தங் கூறவேண்டும். விவாகப் பெண்ணுக்கு பதி சரீரத்துடன் ஸம்பந்தமடைவதற்கு யோக்யதையானது விவாக காலத்திலேயே ஸித்தமாகவிருக்கும்பக்ஷத்தில் அரசனாகவிருப்பவனிடத்தில் அரசனாகவேண்டுமென்ற பிரார்த்தனைபோல் மந்திரங்களால் செய்யப்படும் பிரார்த்தனையும் பேத்தலாகவே முடியுமல்லவா? இதனாலேயே "பாலிகாவிவாஹத்தை ஆதரிக்கும்பக்ஷத்தில் விவாகமந்திரங்களின் அர்த்தமெல்லாம் ஆசையால் மட்டிலும் கற்பிக்கப்பட்ட மோதகத்துக்கொப்பாகு"மென்ற மூடர்களின் பிராந்தியுமகன்றுவிட்டது. ஏனென்றால் ஆசையால் கற்பிக்கப்பட்ட மோதகத்துக்கு ஸமானமாகிய கிடைக்காத விஷயத்தை கிடைக்கும்படி செய்து கொள்வதற்காகத்தான் மந்திரங்களை ப்ரயோகம் பண்ணுவதாகையால் மந்திரங்களுக்கு அப்போதுதான நன்கு பிரயோஜனம் ஸித்திக்கும். கையில் கிடைத்திருக்கும் மோதகத்தை சாப்பிடுவதற்கு மந்திரங்களினபேக்ஷையை எதிர்பார்ப்பவன் முழுமூடனுவானன்றோ? செய்ததைச் செய்வனவெல்லாம் ஸாதனங்களாகமாட்டாது. அறிந்ததையறிவிப்பதும் பிரமாணங்களாகமாட்டாது.

ஜகதீச்வர சாஸ்திரிகள்.

# தேசாந்தரீயப் படிப்புத்தான் எல்லா அனர்த்தத்திற்கும் மூலம்.

பிராமணமஹாஸம்மேளனமாக மாதப்பத்திரிகையில்
மஹாமஹோபாத்யாய திராவிட லக்ஷ்மணசாஸ்திரிகளின்
**ஸம்ஸ்கிருதஉபன்யாஸத்தின் மொழிபெயர்ப்பு.**

பூஜிக்கத்தக்க கற்றோர்களே! வித்யார்த்திகளே! வர்ணாச்ரம தர்மபக்ஷபாதமுள்ள வீரபுருஷர்களே! ஏதோ கொஞ்சம் தெரிவிக்கிறேன். தயவுசெய்து கேட்கவேண்டுகின்றேன். கேட்கப்படாமற்போனாலும், கேட்டு ஆலோசிக்கப்படாமற்போனாலும் அல்லது கார்யத்திற் காட்டப்படாமற்போயினும் அப்போது நிச்சயமாய் பாரதவர்ஷத்திற்கு நாசமே ஏற்படும். நிச்சயம் இப்போதே பாரதவர்ஷத்திற்கு நாசம் ஏற்பட்டுவிட்டாற்போல்தான். ஏதோ சிறிது மீதி இருக்கிறது. அதற்கும் சீக்கிரம் நாசமே ஏற்படும். ஆகவே இது தெரியப்படுத்தப்படுகிறது.

நான் சொல்வது யாருக்கும் தெரியாமலிருப்பதற்கில்லை. என்னவெனில் பாரதவர்ஷத்தில் மேற்றிசையார்களின் கொடியை நாட்டவிரும்பின ஐரோப்பியரான மெகாலே என்ற ஓர் புத்திமான் இப்பாரதவர்ஷத்தில் எதுவரை அவர்களது தர்மம் ஸ்திரமாய்ப் பிரகாசிக்குமோ அதுவரை நமது இங்கிலீஷ்கொடி ஸ்திரமாகமாட்டாது. ஆகையால் அக்கொடி ஸ்திரப்படவேண்டுமானால் முதலில் ராஜபுருஷர்கள் ஸனாதனதர்மத்தைக் குலைக்க ஆரம்பிக்க வேண்டும். பாரதவர்ஷவாஸிகள் எதுவரை அவர்களது வித்தையைப் பிரசாரப்படுத்தி கற்பித்துக்கொண்டிருக்கின்றனரோ அதுவரை சீர்குலைக்கச்செய்யும் நம் முயற்சியும் பலிக்காது. ஆகவே வேரை அறுத்தால் மரத்தைச்சாய்ப்பது எவ்விதம் சுலபமோ அவ்விதம் பாரதவர்ஷவாஸிகள் கற்றுகற்பிக்கும்வேதசாஸ்திரங்களின் பிரசாரத்தைத் தடுக்க ஆரம்பித்தால் காலக்கிரமத்தில் அவர்களது ஸனாதனதர்மம் நாளடைவில் நாசமடைய ஆரம்பிக்கும். நமது ராஜ்யமும் பிறகு வேர்விட்டுக்கொண்டு வெகுகாலம் ஸ்திரமாய் ஓங்கிவளரும். ஆகையால் இதை அனுஸரித்து நம்மவர்கள் வரவர மெள்ளமெள்ள பாரதவர்ஷத்தில் பட்டணம்தாலூகா கிராமம்

பட்டிக்காடு முதலியவிடங்களிலெல்லாம் ஆங்கிலபாஷை கற்பிக்க நமது திரவியத்தைக்கொண்டே பாஷை பள்ளிக்கூடம் மிடில் ஸ்கூல் ஹைஸ்கூல் காலேஜ் யூனிவர்ஸிடி என்று இதுமுதலிய பெயர்கள் கொண்டு அநேக பாடசாலைகளை ஏற்படுத்தவேண்டும் என்று. அவ்விதம் மெகாலேயின் பேச்சுப்படிதான் முற்கூறிய பாடசாலைகள் ஏற்படுத்தப்பட்டன. அவைகளில் ஒவ்வொரு வருஷத்திலும் கணக்கற்ற பொருள்கள் செலவிடப்படுகின்றன. ஒவ்வொரு யூனிவர்ஸிடியையும் எவ்வளவு செலவாகிறதென்று விசாரித்துப்பாருங்கள். கல்கத்தா யூனிவர்ஸிடியில் விசாரித்ததில் ஒவ்வொரு வருஷமும் 20லக்ஷம் ருபாய் செலவாகின்றனவாம்.

இவ்விதம் யூனிவர்ஸிடி எத்துணையோ இருக்கின்றன. பம்பாய், கல்கத்தா, மதிராஸ், பஞ்சாப், அலகபாத், லக்னோ, ஆக்ரா, டக்கா, பரோடா, மைசூர், நைசாம், பனாஸ் இவ்விடங்களிலிருக்கின்றன. இவைகளுள் ஒவ்வொன்றிலும் எத்துணையோ மாணாக்கர்கள் கல்விகற்கிறார்கள் என்று பாருங்கள். ஒவ்வொன்றுக்கும் அனேக பிரிவுகள் இருக்கின்றன. இவ்விதம் யூனிவர்சிடிகளை எற்று மலைவிழுங்கும் மகாதேவன்கள் பலவிருக்கும் போது மொத்தம் ஹைஸ்கூல் முதலியவைகளின் கணக்கென்னவென்று பாருங்கள். கிராமந்தோறும் பட்டிக்காடு தோறும் இப்போது ஆங்கிலேய பாடசாலைகளேற்படுகின்றன. இப்போது இவ்வளவு பாடசாலைகளின் செலவும் இந்தியாவின் தலையில் விடிந்திருக்கிறது. இது மிக ஆச்சரியம் இந்த நம் தேயத்தவர்கள் மேற்றிசையோர்களால் உண்டுபண்ணப்பட்ட மோகம் என்னும் கட்குடித்து தன்னையும் மறந்து தன்னுடைய நாசத்திற்கே இத்துணை பாடசாலைகளேற்பட்டிருப்பதை உணராமல் அம்மட்டோடாவது சந்தோஷமடையாமல் இன்னுமதிகமாய் மேற்றிசையாரின் நாகரீக சிக்ஷையை விரும்பிக்கொண்டு ஏராளமான பணத்தைத் தாராளமாய் அப்படிப்புக்கே வாரி இறைக்கிறார்கள். தேசாந்தரத்தவர்கள் பரமகருணையுடன் நாம் மேன்மையை அடையும் பொருட்டு மேற்றிசை வித்தையைப் பலவிதமாய் நமக்குக் கற்பிக்கிறார்களென்று நினைக்கிறார்கள். இம்மாயாவிகளின் மாயாவித்தன்மையை அறிகிறார்களில்லை. எழு சமுத்திரங்களைக் கடந்து நம் தேசமடைந்து எந்த மேற்றிசையார் இங்கு ஸாம்ராஜ்ய ஸிம்மாசனம் பெற்று நம்மை ஆளுகின்றனரோ அவர்கள் நம்மிடம்

தயவினுக ராஜ்யபரிபாலனம் செய்கின்றனரா அல்லது தங்கள் மனோபீஷ்டத்தை ஸ்தாபிக்கொள்ளவா? இதைப்பிரித்தறியக்கூடிய இப்போது நம்மவர்கட்கு ஸாமர்த்தியமில்லை. மேற்றிசைப்படிப் பால் விவேகத்தை இழந்த நாம் முக்கியமான சிரேயஸ்ஸுக்கு ஸாதனமாய் உள்ளதை அனர்த்தமென்று எண்ணிக் கைகழுவ விடுகின்றோம், எது நிச்சயமாய் இகலோகத்திலும் பரலோகத்திலும் கெடுதலை விளைவிக்குமோ அதையே இஷ்டஸாதனமென்று ஆனந்தமாய்ஏற்கிறோம். இவ்விதமாவதற்குதான்தேசாந்தரத்தவர்கள்தன்பாஷைபடிப்பைவிஸ்தரித்தனர். அதன்மகிமையால்நம்மவர்கள் வெளிப்படையாய் ஜாதியை ஒழித்துவிட முடியாமற்போனாலும் பாஷை நடை உடை பாவனை வியவகாரங்களால் அவர்களைப் போல் நடிப்பவர்களாய் அவர்களாய் ஆய்விட்டார்கள்.

இப்போது அத்தகையோர்களுக்கு உண்ணத்தக்கது, தகாதது குடிக்கத்தக்கது, தகாதது. தொடத்தக்கது தகாததுபோகத்தக்கது தகாததென்று பிரிவே அவர்களைவிட்டு அறவே ஒழிந்தது. எங்கும் அத்வைதஞானமேஇவர்களால் அங்கீகரிக்கப்பட்டுவிட்டது. இவர்களுக்கு தர்மத்தில் சிரத்தையில்லை. பரலோகப் பயமென்பது லோகாந்தரம் சென்றது. ஈசுவரனிடத்தில் பக்தி இல்லை. வேதவாக்கியங்களில் பிராமாண்ய புத்திதுலைந்தது. மேற்றிசையார்களின் உபதேசத்தைத்தான் வேதங்களைக்காட்டிலும் மிகப் பிரமாணமாய் நினைக்கிறார்கள். முன்னோர்களிடத்தில் நம்பிக்கை இல்லை. தர்மானுஷ்டானம் விட்டுவழுவாமல் சாந்தர்களான அவர்களை உலகமறியாத மூடர்களென்று பரிகசிக்கின்றனர். ஒவ்வொரு நாளும் அவர்கள் புஸ்தகத்திலெழுதியிருக்கும் நம் தேச நிந்தையையும் அவர்களது உபதேசங்களையும் ஆங்கிலபாஷையின் ஸாமர்த்தியத்தால் மயங்கிக்கேட்டு விபரீதபுத்தி உள்ளவர்களான இவர்கள் தர்மத்தை அதர்மமாயும் அதர்மத்தை தர்மமாயும் எண்ணி அனுஷ்டித்துக்கொண்டு அதையே எங்கும் பிரசாரம் செய்கிறார்கள். இவ்விதம் இவர்களைச்செய்யவே எங்கும் ஆங்கில கலாசாலையை ஸ்தாபிக்கமுயல்கின்ற மேற்றிசையார்கள் நம்மைக் கடைத்தேற்றிவைப்பதற்கு இவ்விதம் செய்கின்றனரென்று எண்ணுவது மயக்கம். உண்மையில் அன்னியநாட்டார் தன்னினத்தவர்களின் க்ஷேமத்திற்காகவே இப்பெரு முயற்சி செய்கின்றனர். இங்கு செய்யும் முயற்சி அவர்களினினத்தவர்களுக்கு எவ்விதம்

தேசாந்தரியப்படிப்புத்தான்எல்லா அனர்த்தத்திற்கும்மூலம்.அஃ

முயற்சி செய்யுமென்பதை விளக்குகிறேன், இப்பாரதவருஷத்தில்
இப்போதும் பிராசீனவித்தையில் சிக்ஷைபெற்ற பெரியோர்கள்
இருக்கின்றனர். அவர்கள் மாணாக்கர்கட்குக் கற்பிக்கும் பாட
சாலைகளும் அநேகம் இருக்கின்றன. அவைகளில் அநேக வித்தி
யார்த்திகள் வித்தை கற்கின்றனர். அவர்களைப்பாருங்கள். அன்
னியபாஷை மிகசிக்ஷைபெற்று சமர்த்தர்களென்று பலரால்புகழ்ப்
பெற்ற ப்ரொபஸர் என்றவர்களிடத்தில் சிக்ஷைபெறும் மாணாக்கர்
களையும் பாருங்கள். இருவர்களுக்கும் வித்தியாஸம் எவ்வளவு
தாம்? பரதேசத்து தின்பண்டங்கள் எவர்களால் வாங்கப்படு
கிறது என்பதைச் சற்று கூர்ந்து கவனித்தால் அப்போது லோக
க்ஷேமம் செய்யவேண்டுமென்று வித்தியாப்பியாஸம் செய்கின்ற
எந்த மாணாக்கர்கள் நம் தேசத்திற்கு உபகாரம் செய்வார்கள்?
எவர்கள் பரதேசத்திற்கு உபகாரம் செய்வார்களென்பது தெள்
ளென விளங்கும். ஆங்கிலகலாசாலைகளில் கற்பிக்கிறவர்களும்
கற்கிறவர்களும் எத்தனை பெயர் இருக்கின்றனரோ அவர்கள்
கற்பிப்பதற்கும் கற்கவும் ஸாதனமாயும் ஜீவனை ரக்ஷிக்க ஸாதன
மாயும் விளையாட்டிற்கும் போதுபோக்குக்கும் ஸாதனமாயுமான
சாமான்கள் வாஸஸ்தானங்கள். ஆஸ்தானமண்டபம் முதலியவை
களைக் கவனியுங்கள். அவ்வளவும் ஏராளமாய் நம் பணத்தைக்
கொட்டித் தருவிக்கப்பட்ட தேசாந்தரஸாமான்கள்தான் அவை
களுள் எள்ளளவும் நம் தேச சாமானின் கந்தமே இல்லை. ஆனால்
பெயர்மட்டிலும் நமக்கிருக்கிறது. ஹிந்துகாலேஜ் நாஷனல்
காலேஜ் ஹிந்துயூனிவர்ஸிடி என்று. கிரியாம்சையில் கவனித்தால்
உள்ளும் புறமும் இதேசமயம் வீணாய் வளர்ப்பானேன்? இவ்
விதம் வித்தியாலயம் எவ்வளவிருக்கின்றனவோ அவைகளெல்
லாம் தேசாந்தரத்தவர்களின் ஸாமான்களை விற்கும் மார்க்கட்டு
கள்தான். இவ்வித கலாசாலைகளிற் கற்கும் மாணாக்கரோ உபாத்
யாயரோ யாவரும் மலமூத்திரவிஸர்ஜனம் செய்யவும், பல் துலக்க
வும் குளிக்கவும் புசிக்கவும் குடிக்கவும் இத்தேசத்திய ஸாமான்
களையே உபயோகப்படுத்தக் கூசுகின்றனர். ஆனந்தமாய் அந்த
தேசசாமான்களையே உபயோகிக்கின்றனர். அவைகளால் ஸ்வ
தேசஸாமானைத்தள்ளினதோடு ஸ்வதர்மத்தையும் துலைக்கின்றனர்
பாருங்கள். சில நம்குழந்தைகள் தினமும் எழுந்தவுடன் சௌசம்
பல்துலக்கல் செய்யாமல் காபி,டீ முதலிய பானத்தையும் கொட்டி

யையும் புசித்துப் பிறகே படுக்கையைவிட்டெழுந்திருக்கின்றனர். அப்பானத்திற்கும் தேசாந்தரத்தவர்களின் சர்க்கரையையே உப யோகிக்கின்றனர். பிறகுதான் மலமூத்ரவிஸர்ஜனம் செய்கிறார்கள். (தொடரும்)

M. N. சுப்பிரமணிய சாஸ்திரி.

---

# சிராத்தத்தில் சிலரது ஆசங்கை.

(1) சிராத்தம் என்றால் என்ன அர்த்தம்?

श्रत् = सत्यम, दयादि याक्रिया साश्रद्धा । श्रद्धया यत्क्रियते तच्छ्राद्धम् ॥

"சிரத் என்றால் ஸத்தியமாம். அதை தரிக்கும் கிரியை சிரத்தை யெனப்படும். அந்த சிரத்தையோடு எது செய்யப்படுகிறதோ அது சிராத்தமெனப்படும்" என்று சொல்லியிருப்பதால் சிராத்த ஸ்வரூபம் ஏற்படுகின்றது. இதனால் ஸித்திக்கும் அர்த்தத்தை உண்மையாகவே எடுத்துக்கொள்வோமானால்

மத்ஸ்யபுராணம் 17வது அத்தியாயத்தில்—

द्वौ मासौ मत्स्यमांसेन त्रीन्मासान् हारिणेन तु ।
औरभ्रेणाथ चतुरः शाकुनेनाथ पञ्चवै ॥ (31)
षण्मासान् छागमांसेन तृप्यन्ति पितरस्तथा ।
सप्तपार्षतमांसेन तथाष्टावेणजेन तु ॥ (32)
दशमासांस्तु तृप्यन्ति वराह महिषामिषैः ।
शशकूर्मजमांसेन मासानेकादशैव तु ॥ (33)
रौरवेण च तृप्यन्ति मासान्पञ्चदशैव तु ।
व्याघ्रसिंहस्य मांसेन तृप्तिर्द्वादशवार्षिकी ॥ (34)
काळशाकेनचानन्ता खड्गमांसेन चैवहि ॥

"மீன் மாம்சத்தினாலும் சிராத்தம் செய்தால் பிதிருக்களுக்கு இரண்டு மாஸம் திருப்தியுண்டாகின்றது. ஸாமான்யமான்களுடைய மாம்ஸத்தால் மூன்று மாஸமும், ஒட்டகத்தின் மாம்ஸத்தால் நான்கு மாஸமும் பக்ஷிகளின் மாம்ஸத்தால் ஐந்து மாஸமும்

வெள்ளாடு மாம்ஸத்தால் ஆறு மாஸமும் கலைமான் மாம்ஸத்தால் ஏழுமாஸமும் விசாலமான கண்களுடைய கருப்புமான் மாம்ஸத்தால் எட்டு மாஸமும், பன்றி, எருமை இவைகளின் மாம்ஸத்தால் பத்துமாஸமும், முயல், ஆமை இவைகளின் மாம்ஸத்தால் பதினோரு மாஸமும், கருப்பு சாலேபுடைய கலைமான் மாம்ஸத்தால் பதினைந்து மாஸமும், புலி, ஸிம்ஹம் இவைகளின் மாம்ஸத்தால் பன்னிரண்டு வருஷமும், பிதிருக்களுக்கு திருப்தியுண்டாகின்றது. கட்கமிருகத்தின் மாம்ஸத்தால் அளவற்ற திருப்தியுண்டாகும். அவ்விதமே கருவப்பில்லை கரியாலும் தோகையலாலும் அளவற்ற திருப்தியுண்டாகும்'' என்று சொல்லியிருக்கிறபடிமாம்ஸங்களையும் சேர்த்து சிராத்தம் செய்து ஏன் திருப்திசெய்யக்கூடாது? அதை ஏன் அனுஷ்டானத்திற்குக் கொண்டுவரவில்லை? அவ்விதம்செய்து வந்தால் எண்ணில்லாதவருஷம்வரை திருப்தி உண்மையில் அடைவிக்கக்கூடுமா? அவ்விதமாகச் செய்யக்கூடுமானல் அதை வேதம் அங்கீகரிக்கின்றதா? அப்படி அங்கீகரிப்பதாகத்தெரியவில்லையே. மாம்ஸபட்க்ஷணம், மதுபானம் முதலிய காரியங்களை வேதம் பாப கார்யமென்று தெரிவிக்கின்றதேயன்றி நல்லதென்று தெரிவிக்கவில்லை. அன்றியும் 'அஹிம்ஸாபரமோதர்ம:' என்றல்லவா வேதம்போதிக்கின்றது. மாம்ஸத்தால் சிராத்தம்செய்வதைதிருப்திகாமென்று அங்கீகரித்தால் அஹிம்ஸாதர்மத்தைஎப்படி பரிபாலனம் செய்யக்கூடும். உண்மையென்று நம்பிக்கையுடன் செய்யப்படுவது தானே சிராத்தமென்ற பதத்தின் பொருள் ஏற்படுகின்றது. அஹிம்ஸாதர்மத்திற்கு விரோதமாயிருப்பதால் இதை உண்மையாய் இருக்குமென்று எப்படி நம்பமுடியும்?

2. மரித்துப்போன மாதா பிதாக்களுக்கு ஏதோ லோகாந்தரத்தில் ஜன்மமேற்படுவதாக நிச்சயித்துக்கொண்டு அவர்கள் திருப்திக்காக தாகுகாரனுக்கு கைக்கூலி கொடுப்பதுபோல் பிராமணர்களுக்கு போஜனமளித்து ஸன்மானத்துடன் தக்ஷிணைகொடுத்து ஆதரிக்கும்பக்ஷத்தில் அவர்களுக்கு அப்படியே திருப்தி ஏற்பட்டுவிடுமென்றும் அதனல் அப்படிச் செய்யவேண்டியது அவசியம் என்றும் எவ்விதத்திலேயாவது ஒப்புக்கொள்ளக்கூடியதாயில்லை. ஏனெனில் வேதங்களும் புராணங்களும் ஒரேத்வனியுடனே கீழ் வருமாறு முறையிடுகின்றன. ஸ்ரீமத்பாகவதம் பத்தாவது ஸ்கந்தம் முதலத்தியாயத்தில்—

देहेपंचत्वमापन्ने देहीकर्मानुगोऽवशी ।
देहान्तरमनुप्राप्य प्राक्तनंत्यजते वपुः ॥

"சரீரம் மரித்தவுடன் அச்சரீரத்திலிருந்த ஆத்மா தானியற்றிய கர்மாவுக்கேற்றபடி அமைந்துள்ள வேறொரு சரீரத்தை ஸ்வாதந்திரியமில்லாமல் அடைந்து முந்திய சரீரத்தைவிட்டுவிடுகின்றான்" என்று மாதாபிதாக்களுக்கு கர்மவசத்தால் வேறொரு சரீரம் வருவதாகத் தெரிகிறது. இதை உண்மையாக எடுத்துக்கொண்டால் மாதாபிதாவெனப்படும் ஜீவாத்மாவும் புதியதோர் சரீரத்தை உண்மையில் அடைந்துவிட்டது. நாம் செய்யும் பிராமணபோஜனம் எப்படி அவர்களுக்கு திருப்திசெய்யும் என்பதே இவ்விடத்தில் வினா. இந்த பிராமணபோஜனத்தாலேயே தாயார் தகப்பனார் நல்ல லோகம் செல்வார்களென்று நம்பிக்கைதிடமாக வைக்க வேண்டுமானால் அது—

अवश्यमनुभोक्तव्यं कृतं कर्म शुभाशुभम् ॥

"தான் செய்த சுபாசுபகர்மங்களின் பயனை அவசியம் அனுபவித்தே தீரவேண்டும்" என்ற வசனத்திற்கு விரோதமாயிருக்கிறது. இந்த வசனமோ அவரவர்கள் செய்த கர்மத்தின் பயனை அவரவர்கள் அனுபவிக்கிறார்களென்பது உண்மையென்று எடுத்துக்கொள்வோமேயாகில் புத்திரபௌத்திரர்கள் செய்யும் சிராத்தாதி கர்மாவினால் என்ன பலனை அடையக்கூடும். இதில் இந்த நீதிவசனத்தை நம்புகிறதா சிராத்தம் செய்யவேண்டுமென்கிற வசனத்தை நம்புகிறதா?

(3) கிராமாந்திரம் சென்ற தகப்பனாருக்கோ அல்லது வேறு பந்துமித்திரர்களுக்கோ மணியார்டர் அனுப்பப்படுகிறதல்லவா? அவரவர்கள் கர்மபலனை அனுபவிப்பதற்கு அன்னியர்கள் மணியார்டர் செய்தனுப்புவது விரோதமற்றதுபோலிதுவுமிருக்கட்டுமேயெனில் அதில் என்னுடைய மித்திரனாகிய வடதேசத்துப்பண்டிதர்கள் கீழ்க்கண்டவாறு வினவுகிறார். மணியார்டர் செய்தால் அதைப்பெற்றுக்கொண்டதாக கையொப்பமிட்ட ரசிது அனுப்பினவருக்கு எப்படி கிடைக்கிறதோ அம்மாதிரி லோகாந்திரம் சென்ற மாதாபிதாக்கள் நாம் செய்த சிராத்தபலனை அடைந்து திருப்திபட்டதற்கு பிரமாணம் கொடுக்கக்கூடுமா எந்தவிதத்தில்

திருப்தி அடைந்தார் என்று விவரித்துச் சொல்லமுடியுமா? அல்லாமலும் நான்உயிரோடு காசியிலோ அல்லது வேறு தேசத்திலோ பத்துபன்னிரண்டு வருஷகாலம் வரையில் வஸித்துக்கொண்டு நம் தேசத்தை நோக்கிப்போகாமலிருக்கும்போது என்னுடைய புத்திரன் நான் வாராமலிருப்பதை நோக்கி என் திருப்திக்காக பிராமணர்களுக்கு அன்னமிட்டால் என்னுடைய பசி தாகம் அன்றைய தினத்திற்காவது நீங்கிவிடுமா? ஒருநாளும் நீங்குவதில்லை என்பது பிரத்தியக்ஷம். இவ்வாறு நான் உயிரோடு பூலோகத்தில் இருக்கும்போதே பிராமணரிடம் கொடுத்தபோஜனத்தால்எனக்கு திருப்திசெய்ய முடியாமலிருக்கும்போது நானிறந்தபிறகு இந்த மாதிரி பிராமணர்களைஅழைத்து அன்னமளித்துவிட்டால்எனக்கு திருப்திஉண்டாகுமென்று எப்படி நம்பமுடியும். இது இப்படி இருக்க யஜுர்வேதத்தில் ஜீவன் சரீரத்தைவிட்ட பிறகு பன்னிரண்டு நாள் வரையில் ஆகாசத்தில் திவ்யபதார்த்தத்தோடு கூடிய தேவர்களுடன் சேருகிறார்களென்றும் பிறகு மறு ஜன்மத்தை கர்மானுசாரமாக அடைகிறனென்றும் சொல்லப்பட்டிருப்பதை ஸத்யவாக்கென்றே நம்பவேண்டும். ஏனெனில் அதுவேதமொழி. வேதமே இந்தவிதமாகச் சொல்லும்போது நாம் பிராமணர்களுக்கு போஜனம் செய்வித்து தக்ஷிணையளித்து சிராத்தம் செய்வதனுல் நம்முன்னோர்கள்திருப்தியடைகிறார்களென்பது முழுவதும் கட்டுக்கதை. சுயநலத்தைக்கருதி முன்னே இருந்த பிராமணர்கள் இவ்விதமாக வேதத்திற்கு விரோதமான கார்யம் ஏற்படுத்தியது உசிதமில்லை என்று தெரியவருகிறது. அன்றியும் கீழ்க்காட்டியவேதவசனத்தால் தேவதைகளோடு சேர்ந்த மாதாபிதாக்களுக்கு திருப்திசெய்யவேண்டுமென்றால் தேவதைகளுக்கு திருப்திகாமென்று சொல்லப்பட்ட பஞ்சமகாயக்ஞங்களைப் பிரதிதினமும் செய்துவந்தால் போதாதா? தனியாக சிராத்தமென்பதைச் செய்யவேண்டியதுதானு? வடதேசத்துப் பண்டிதருடைய சித்தாந்தமே சரியா? அப்படி அது உண்மையானல் சிராத்தம்செய்ய வேண்டாமா? இதுவிஷயத்தில் எது உசிதமோ எது வேதத்திற்கு அனுகூலமோ அதை என்மீது கிருபை செய்து தெரிவிக்க வேணும்.

(4) தர்ப்பணமென்றால் என்ன? இந்த விஷயத்தைப்பற்றி எனக்கும் வடதேசத்துப் பண்டிதருக்கும் வாக்குவாதம் ஏற்பட்

டது. தர்ப்பணம் என்பதின் அர்த்தத்தை விளக்கவேண்டும் என்று கேட்டபோது ஸ்ரீமான் மகாபலேச்வர சர்மாவின் அபிப்பிராயம் மேல்சொல்லப்போகிறபிரகாரம் வெளியிடப்பட்டது.

அதாவது—" तर्पयन्तियेनपितृन् तत्तर्पणम् "

எந்த கர்மாவினுல் பிதிருக்களுக்கு திருப்தி ஏற்படுகிறதோ அது தர்ப்பணமென்று சொல்லப்படுகிறது. அப்படியானுல் சரீரத்தை விட்டகன்ற மாதாபிதாக்களுக்கு எள்ளு தர்ப்பம் இவைகளினுல் எப்படி திருப்தி செய்யக்கூடும். யாருக்கு திருப்தி செய்யவேண்டுமோ அவர்கள் பூலோகத்தில் சரீரத்துடன் இல்லாமலிருக்கும்போது எப்படி திருப்திகரமாகக் கர்மாவைச் செய்கிறது. இதினுல் அவர்கள் எந்தவிதமாகத் திருப்தியடைகிருர்கள் என்று நம்பிக்கைவரும்படி காட்டமுடியுமா? ஆகையால் மதாபிதாக்கள உயிருடனிருக்கும்போது செய்யப்படும் காரியம்தான் அவர்களுக்கு திருப்திகரமான காரியமாகும். ஆகவே அப்படிச் செய்யும்படியான காரியமதான் தர்ப்பணமென்று நிச்சயிக்கப்படுகிறது. இவ்விதமிருக்க பூலோகத்தில் சிரேஷ்டமான இந்த ஆர்யாவர்த்தத்தில் சிலாக்கியமாகக் கூறப்பட்ட தபஸ்விமுனிகளாகிய மனு, பாத்வாஜர், காசியபர், வஸிஷ்டர், அகஸ்தியர், வியாஸர், நாரதர் முதலிய இப்பேர்ப்பட்டவர்களின வம்சத்தில் ஜன்மத்தைஎடுத்து இநதமாதிரியான சிரேஷ்டமற்ற அநீதியான காரியத்தை நம் முனனோர்கள் எதற்காக செய்விக்க முயன்றனர். பிந்தியவர்களால் அவைகளும் புத்திக்குறைவினுல் செய்யப்பட்டு வருகின்றன என்று வடதேசத்திய பிராமணரால் நிந்திக்கப்பட்ட காரியத்தை ஏன் செய்துவரவேண்டும். அல்லது அவர்கள் சொல்வது சரியல்லவென்று செய்தே தீரவேண்டும். அப்படி செய்துவரவேண்டியதவசியமென்றுல் சிறுவன் மீது கிருபை கூர்ந்து வேதத்திலிருக்கும் பிராமணத்தைக்கொடுத்து இந்த விஷயத்தில் நம்முடைய ஸித்தாந்தங்களைத் தெரிவித்து நல்வழியைக் காண்பிக்க வேண்டுமென்று பூர்ணநம்பிக்கையுடனிருக்கின்றேன்.

(தொடரும்)